இணைப்பு I

(75 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

சிறுபான்மையினர் நலன்

கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.

—குறள்

எனும் குறளில் தெய்வப் புலவர் வகுத்த கொள்கை வழியில் செயல்படும் இவ்வரசு சிறுபான்மையின மக்களின் முன்னேற்றத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட அரசாக பெரும்பான்மை மக்களுக்கு இணையாக சிறுபான்மைச் சமூகம், கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் ஏற்றம் காணும் வகையில் பல நலத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

2. பாரதப் பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்தவும், நலத் திட்டங்களின் பயன்கள் சிறுபான்மையினருக்குச் சென்றடைவதைக் கண்காணிக்கவும் சிறுபான்மையினர் நல இயக்ககம், இந்திய ஆட்சிப் பணி அலுவலர் தலைமையில் 2007 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. சிறுபான்மையின சமுதாயத்தினருக்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்த ஒரு மாவட்டத்திற்கு ஒரு கண்காணிப்பாளர், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் என்ற அளவில் 90 பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியர்களுக்கு தனி இட ஒதுக்கீடு

3. தனி இட ஒதுக்கீடு வழங்கக் கோரி சிறுபான்மையின சமுதாயத்தினரிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு மனுக்களின்மீது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையைப் பெற்று பரிசீலித்த அரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை நிறைவேற்றியது. இச்சட்டம் 15-09-2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2010 ஏப்ரல் 27

4. தமிழ்நாட்டில் உள்ள இஸ்லாமியர்களில் 95 விழுக்காடு பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலும், கிறித்தவர்களில் 80 விழுக்காடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளனர்.

கல்வி உதவித் தொகை

5. "காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது."

—குறள்

எனும் தமிழ்மறை கண்ட பெருநாவலரின் அறநெறியில் கல்வியினை இடைவிடாது தொடர்ந்து பயிலும் வகையில் பள்ளி செல்லும் சிறார் முதல் தொழிற்கல்வி, ஆராய்ச்சிப் படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர்கள் வரை பயன்கள் சென்றடையும் விதத்தில் மத்திய அரசின் கல்வி உதவித் தொகை திட்டங்களை இவ்வரசு தொடர்ந்து செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

பள்ளிப் படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம்

6. பாரதப் பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டத்தின்கீழ் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு மத்திய அரசால் 2008-2009 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பள்ளிப் படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்தில் இவ்வரசு எடுத்துக் கொண்ட தொடர் முயற்சியின் காரணமாக 24,135 ஆக இருந்த கல்வி உதவித் தொகை பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை, மைய அரசு 2009-10 ஆம் ஆண்டில் மும்மடங்காக உயர்த்தியது. இதன்மூலம் 43,890 கிறித்தவர்கள், 40,260 முஸ்லீம்கள், ஆக மொத்தம் 84,150 மாணவ, மாணவியர்கள் பயன்பெற்றனர். கல்வி உதவித் தொகை பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையில் 30 விழுக்காடு மாணவியர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. பெற்றோர்/பாதுகாவலரது ஆண்டு வருமானம் ஒரு இலட்சத்திற்கு மிகாமல் உள்ள மற்றும் ஆண்டு இறுதித் தேர்வில் குறைந்தபட்சம் 50 விழுக்காடு மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவியர் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவர். குறைந்த வருமானம் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும்.

2010 ஏப்ரல் 27]

8. 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயில்பவர்களுக்கு சேர்க்கைக் கட்டணம் அதிகபட்சமாக ஆண்டொன்றுக்கு ரூ.500/-ம், கல்விக் கட்டணம் அதிகபட்சமாக ஆண்டுக்கு ரூ.3,500/-ம் வழங்கப்படுகிறது. இதுதவிர விடுதியில் தங்கிப் பயில்பவர்களுக்கு பராமரிப்புக் கட்டணமாக மாதம் ரூ.600/- வீதம் ஒரு ஆண்டில் 10 மாதங்களுக்கும், விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு மாதம் ரூ.100/- வீதம் ஒரு ஆண்டில் 10 மாதங்களுக்கும் வழங்கப்படுகிறது.

9. 2009-2010 ஆம் ஆண்டில் மைய அரசின் 75 விழுக்காடு பங்களிப்பாக ரூ.7.83 கோடியும் மாநில அரசின் 25 விழுக்காடு பங்களிப்பாக ரூ.2.58 கோடியும் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் ஆண்டிற்கு ரூ.11.62 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம்

10. மேல்நிலைப் பள்ளிக் கல்வி, தொழில்நுட்பப் பட்டயப் படிப்பு, தொழிற் பயிற்சி, ஆசிரியர் பயிற்சி, இளங்கலை, முதுகலை பட்டப் படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு ஆகியவற்றைப் பயிலும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு பள்ளி மேற்படிப்புக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

11. இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற மாணவ, மாணவியர்கள் முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூபாய் இரண்டு இலட்சமாகும். 30 விழுக்காடு கல்வி உதவித் தொகை மாணவியர்களுக்கு வழங்கப்படுகிறது.

12. பராமரிப்புக் கட்டணமாக, விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ.235/- முதல் ரூ.510/- வரையிலும், விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு மாதம் ரூ.140/- முதல் ரூ.330/- வரையிலும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வருடத்திற்கு ரூ.3,000/- முதல் ரூ.7,000/- வரை சேர்க்கை மற்றும் கல்விக் கட்டணமாக வழங்கப்படுகிறது. இந்தக் கல்வி உதவித் தொகை பெறும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை, 2008-2009 ஆம் ஆண்டில் 6,693 ஆக இருந்தது. 2009-2010 ஆம்

[2010 ஏப்ரல் 27

ஆண்டில் இதனை கணிசமாக உயர்த்தி 26,342 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகைகள் வழங்க மைய அரசு தமிழகத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.10.83 கோடி கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் ஆண்டிற்கு ரூ.11.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம்

13. அதிக மதிப்பெண்கள் பெற்று அரசு மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளில் தொழிற் கல்வி/தொழில்நுட்பம் சார்ந்த இளங்கலை மற்றும் முதுகலை பட்டப் படிப்பு பயிலும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த மாணவ மாணவிகள் மற்றும் மத்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட

1. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (ஐஐடி), சென்னை
2. நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (என்.ஐ.டி), திருச்சி
3. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி அண்டு டிசைன் மேனேஜ்மென்ட், காஞ்சிபுரம் மற்றும்
4. நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் பேஷன் டெக்னாலஜி, சென்னை

ஆகிய தொழிற் கல்வி நிலையங்களில் பயிலும் சிறுபான்மை இன மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த கல்வி உதவித் தொகைத் திட்டம் 2007-2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கல்விக் கட்டணங்கள் முழுவதுமாக வழங்கப்படுகிறது.

14. அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் தொழிற்கல்வி நிலையங்களில் தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி பயிலும் சிறுபான்மை இன மாணவ/மாணவியர்களுக்கு அவர்கள்

2010 ஏப்ரல் 27]

செலுத்தும் கல்விக் கட்டணம் அல்லது ரூ.20,000/- இவற்றில் எது குறைவோ அத்தொகை வழங்கப்படுவதோடு பராமரிப்புக் கட்டணமாக விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.10,000/-ம், விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு ரூ.5,000/-ம் வழங்கப்படுகிறது. புதிதாக கல்வி உதவித் தொகை பெற்றவர்களுக்கு தகுதிகளின் அடிப்படையில் அடுத்த ஆண்டுகளில் புதுப்பித்தலுக்கான கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

15. இவ்வுதவித் தொகை பெற பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.5 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் 50 விழுக்காட்டிற்குக் குறையாமல் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். மாணவியருக்கு 30 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2009-2010 ஆம் ஆண்டில் 2,050 மாணவ, மாணவிகளுக்கு ரூ.5.33 கோடி கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் ஆண்டிற்கு ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இஸ்லாமிய பள்ளி/கல்லூரி மாணவியர் விடுதிகள்

16. கிராமப்புறங்களைச் சேர்ந்த சிறுபான்மையின மாணவியர்கள் நகர்ப்புறங்களில் தங்கி தொடர்ந்து கல்வி பயில ஏதுவாக சத்தான உணவுடன் இலவச உறைவிடம் வழங்கி வேலூர், திருச்சி, திண்டுக்கல், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு விடுதி செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு விடுதியிலும் 25 பள்ளி மாணவியர்கள் மற்றும் 25 கல்லூரி மாணவியர்கள் தங்குவதற்கு போதிய அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

17. இவ்விடுதிகளில் சேருவதற்கு மாணவியரின் பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூபாய் ஐம்பதாயிரத்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக 2009-2010 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்விடுதிகள் பராமரிப்பு செலவிற்காக 2010-2011 ஆம் ஆண்டிற்கு ரூ.49.36 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2010 ஏப்ரல் 27

சிறுபான்மை இன மாணவ, மாணவியர்களுக்கான பரிசுகள் வழங்கும் திட்டம்

18. சிறுபான்மையின மாணவ, மாணவியர்களிடையே கல்வி கற்கும் ஆர்வத்தைத் தொடர்ந்து தூண்டும் வகையில் ஆண்டு தோறும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் மாநில மற்றும் மாவட்ட அளவில் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

மாநில அளவிலான பரிசுகள்

19. மாநில அளவில், 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல், இரண்டு மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்று அதிக மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி வீதம் இரண்டு முதல் பரிசுகள், இரண்டு இரண்டாம் பரிசுகள் மற்றும் இரண்டு மூன்றாம் பரிசுகள் முறையே ரூ.10,000, ரூ.8,000 மற்றும் ரூ.6,000-ம் அதே போன்று 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மூன்று அதிக மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு இரண்டு முதல் பரிசுகள், இரண்டு இரண்டாம் பரிசுகள் மற்றும் இரண்டு மூன்றாம் பரிசுகள் முறையே ரூ.5,000, ரூ.4,000 மற்றும் ரூ.3,000-ம் வழங்கப்படுகிறது.

20. கடந்த 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.0.93 இலட்சம் செலவிடப்பட்டு 16 மாணவ, மாணவியர்கள் பயனடைந்தனர்.

இத்திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் ஆண்டிற்கு ரூ.0.72 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான பரிசுகள்

21. 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல், இரண்டு, மூன்று நிலைகளில் மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி வீதம் இரண்டு முதல் பரிசுகள், இரண்டு இரண்டாம் பரிசுகள் மற்றும் இரண்டு மூன்றாம் பரிசுகள் முறையே ரூ.3,000, ரூ.2,000 மற்றும் ரூ.1,000-ம், அதேபோன்று 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும்

2010 ஏப்ரல் 27]

முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி வீதம் இரண்டு முதல் பரிசுகள், இரண்டு இரண்டாம் பரிசுகள் மற்றும் இரண்டு மூன்றாம் பரிசுகள் முறையே ரூ.1,500, ரூ.1,000 மற்றும் ரூ.500-ம் வழங்கப்படுகிறது.

22. 2009-2010 ஆம் ஆண்டில் இப்பரிசுத் திட்டத்தின்கீழ் 458 சிறுபான்மையின மாணவ, மாணவியர்கள் ரூபாய் 7.23 இலட்சம் பரிசுத் தொகையாக பெற்றனர்.

இத்திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் ஆண்டிற்கு ரூ.6.31 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

23. மாநில மற்றும் மாவட்ட அளவில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது மதிப்பெண்களை ஒன்றுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பெறும்போது பரிசுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு அவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

உருதுமொழி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான பரிசுத் திட்டம்

24. இத்திட்டத்தின்கீழ் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் மூன்று மாணவர்கள் மற்றும் மூன்று மாணவியர்களுக்கு முறையே ரூ.3,000/-, ரூ.2,000/-மற்றும் ரூ.1,000/-ம், அதே போன்று 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்விலும் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் மூன்று மாணவர்கள் மற்றும் மூன்று மாணவியர்களுக்கு முறையே ரூ.2000/-, ரூ.1500/- மற்றும் ரூ.1000/-ம் பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது.

25. உருது மொழி பேசும் சிறுபான்மையினரின் மொழியினைப் பாதுகாக்கும் வகையில் உருது மொழியை முதல் அல்லது இரண்டாவது மொழியாகப் பயின்று 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் மூன்று மாணவர்கள் மற்றும் மூன்று மாணவியர்களுக்குப் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

26. இத்திட்டத்தில் ஒரே மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகளின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டு, தகுதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் ஆண்டிற்கு ரூ.0.21 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறுபான்மையினருக்கான திறன் வளர்க்கும் பயிற்சி

27. சிறுபான்மையினத்தைச் சார்ந்த இளைஞர்கள் தனியார் துறைகளில் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கும், சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்திக்கொள்வதற்கும் உரிய வகையில் அவர்களது திறனை மேலும் மேம்படுத்தும் பொருட்டு ஆயத்த ஆடை வடிவமைப்பு, தையல் பயிற்சி, ஆய்வக தொழில் நுட்பப் பயிற்சி, வெல்டிங், தச்சு வேலைப் பயிற்சி, காலணிகள் வடிவமைப்பு, தகவல் தொழில்நுட்பம் போன்றவற்றில் இலவச சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஆண்டொன்றுக்கு ரூ.2.50 கோடி செலவில் 2007-2008 முதல் செயல்படுத்தப்படுகிறது.

28. 2010-2011 ஆம் ஆண்டில் இத்திட்டம் சுமார் 8,000 சிறுபான்மையின இளைஞர்கள் மற்றும் மகளிர் பயனடையும் வகையில் ரூ.2.50 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

29. தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மையினர் வியாபாரம் மற்றும் தொழில் செய்து தங்களது வருமானத்தைப் பெருக்கி பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய உதவிடும் வகையில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1999 ஆம் ஆண்டில் இவ்வரசால் ஆரம்பிக்கப்பட்டு நன்கு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகமானது புதுதில்லி தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து கடனுதவி பெற்று, தமிழ்நாட்டில் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியுள்ள சிறுபான்மை இனத்தவர்கள் சுய தொழில் மற்றும் வியாபாரம் செய்து, பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வேண்டி தகுதியுள்ள கடன் உதவிகளை குறைந்த வட்டியில் வழங்கி வருகிறது. இக்கடன்கள் மாநிலத்தில் உள்ள கூட்டுறவு வங்கிகள் மூலம் ஆண்டுக்கு 6 விழுக்காடு வட்டி வீதத்தில் வழங்கப்படுகின்றன.

30. சுய உதவிக் குழுக்களில் 60 விழுக்காட்டிற்குக் குறையாமல் சிறுபான்மையினர் உறுப்பினராக இருப்பின் அவர்களுக்கு 4

2010 ஏப்ரல் 27]

விழுக்காடு வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், உறுப்பினர் ஒருவருக்கு ரூ.25,000/- வரை கடனாக வழங்கப்படுகிறது.

31. ஆட்டோ ஓட்டுநர் தொழில் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ள சிறுபான்மையினர் சொந்தமாக ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்கி சுயதொழில் புரிய நபர் ஒருவருக்கு ரூ.1,21,000/- வரை 6 விழுக்காடு வட்டியில் கடன் வழங்கப்படுகிறது.

32. இதுவரை ரூ.613.72 இலட்சம் தனிநபர் கடனாக 1,117 பயனாளிகளுக்கும், கல்விக் கடனாக ரூ.30.48 இலட்சம் 41 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சிறுகடன் திட்டத்தின்கீழ் 8,418 சிறுபான்மையின பயனாளிகளுக்கு ரூ.1,413.73 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

33. 2009-2010 ஆம் ஆண்டில் சிறுபான்மையினர் கடனாக இதுவரை ரூ.2,057.93 இலட்சம் 9,576 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2010-2011 ஆம் ஆண்டில் சுமார் 12,500 சிறுபான்மையினர் பயன் பெறும் வகையில் ரூ.25 கோடி இந்நிறுவனம் மூலம் கடனாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாநில சிறுபான்மையினர் ஆணையம்

34. தமிழ்நாட்டில் வாழும் மதம் மற்றும் மொழி வழி சிறுபான்மையினருக்கு அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள நலன்களைப் பேணிக் காத்திடவும், அவர்கள் உரிமைகளைப் பாதுகாக்கவும் மாநில சிறுபான்மையினர் ஆணையம் 1989 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்டு வருகிறது. தற்போதைய ஆணையம் 19-11-2009 அன்று திருத்தியமைக்கப்பட்டது. இவ்வாணையம் தற்பொழுது தலைவர் உள்ளிட்ட ஏழு உறுப்பினர்களுடன் இயங்கி வருகிறது.

பாரதப் பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டம்

35. சிறுபான்மையினரின் மக்கட்தொகைக்கேற்ப அனைத்து வளர்ச்சித் திட்டங்களின் பலன்கள் குறிப்பிட்ட காலவரையறைக்குள் சிறுபான்மையினரைச் சென்றடைவதை உறுதி செய்யவும், பொருளாதார மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும்

திட்டங்களில் சிறுபான்மையினருக்கு நியாயமான பங்கு கிடைக்கச்செய்யவும் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

36. சிறுபான்மையின மக்களுக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட சேவைகளின் பயன் சமமாகக் கிடைக்கச் செய்வதை உறுதி செய்தல், கல்வி வாய்ப்பை அதிகரித்தல், கல்வி உதவித் தொகை வழங்குதல், சுய வேலைவாய்ப்புத் திட்டம், தொழில்நுட்பப் பயிற்சியின் மூலம் திறனை மேம்படுத்துதல், பொருளாதார உதவியை நீட்டித்தல், மாநில மற்றும் மைய அரசின் கீழ் வேலைவாய்ப்பு, சிறுபான்மையினர் வசிக்கும் குடிசைப் பகுதிகளின் நிலையை மேம்பாடடையச் செய்தல், இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு உதவி வழங்கல், இனக்கலவரங்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும். இத்திட்டம் முறையாக செயலாக்கப்படுவதைக் கண்காணிக்க மாநில அளவில் தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் ஒரு உயர்நிலைக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம்

37. தேவைப்படும் முஸ்லீம் சமூக மகளிருக்கு உதவும் பொருட்டு அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விதைத்தொகையாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூபாய் ஒரு இலட்சம் வீதம் மாவட்டங்களுக்கு ரூபாய் 30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் மூலமாக ஆதரவற்ற முஸ்லீம் விதவைகள், மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லீம் மகளிர், வயது முதிர்ந்த முஸ்லீம் மகளிர் ஆகியோர்களுக்கு உதவும்வகையில் தையல், பூ-வேலைபாடுகள், காலணிகள் தயாரித்தல், கைவினைப் பொருட்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவை அடிப்படையிலான உதவிகள் வழங்கப்படுகின்றன.

38. ஒவ்வொரு முஸ்லீம் மகளிர் உதவும் சங்கமும் திரட்டும் நிதி ஆதாரத்தைப் பொறுத்து, அரசு ஒவ்வொரு சங்கத்திற்கும் அதிகபட்சம் ரூ.10 இலட்சம் வரை இணை மானியம் வழங்கி வருகிறது.

2010 ஏப்ரல் 27]

39. 2009-2010 ஆம் ஆண்டில் வேலூர், கடலூர், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, ஈரோடு, மதுரை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்கு இணை மானியமாக ரூ.*27.83* இலட்சமும், சென்னை முஸ்லிம் மகளிர் உதவும் சங்கத்திற்கு ரூ.*2.98* இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் *2010-2011* ஆம் ஆண்டிற்கு ரூ.*25* இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உலமாக்கள் நல வாரியம்

40. இஸ்லாமியர்கள் தொழுகை நடத்தும் பள்ளிவாசல்கள், மதரசாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள்/ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் தர்காக்கள், ஆஷுர்கானாக்கள், அடக்கத்தலங்கள், தைக்காக்கள், முஸ்லிம் அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் ஆகியோருக்கு உதவும் பொருட்டும் மற்றும் அவர்களது கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான வாய்ப்பினை ஏற்படுத்தும் பொருட்டும் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் *24-08-2009* அன்று துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அமைப்புச்சாரா தொழிலாளர்கள் நல வாரியத்தில் வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள் போன்றே இவ்வாரியத்திலும் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாரிய உறுப்பினர்களும் உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீடு திட்டத்தின்கீழ் பயன்பெறலாம்.

41. இந்த நல வாரியத்தில் இதுவரை *10,294* உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் *27* உறுப்பினர்களுக்கு நல உதவியாக ரூ.*89,440/-* வழங்கப்பட்டுள்ளது.

2010-11 ஆம் ஆண்டிற்கு இந்த வாரியத்திற்கு ரூ.*100* இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அரசு சிறுபான்மையினரின் காவலனாக பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் நலத் திட்டங்களையும் செவ்வனே செயல்படுத்துவதன் வாயிலாக சிறுபான்மையினரின் நலனையும் பொருளாதார முன்னேற்றத்தினையும் மேம்படுத்திட தொய்வின்றி பாடுபட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS — வாய்மையே வெல்லும்